## 3. கவன ஈர்ப்பு.

### (அ) சங்கரி நகரில் குடிநீர்த் தட்டுப்பாடும், குடிநீர் வழங்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியமும் குறித்து

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, சேலம் மாவட்டம் சங்கரி நகரில் தற்போது கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டு, அங்குள்ள மக்கள் அவதியுறும் நிலைபற்றியும், அதை நிவர்த்திக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியதுமான அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, சங்கரி பேரூராட்சியின் மக்கள் தொகை 14,008 ஆகும். மொத்தம் உள்ள 13 தொகுதிகளில் 5 தொகுதிகள் நகரிலும் மற்ற 8 தொகுதிகள் கிராமப்புறத்திலும் உள்ளன. சங்கரி பேரூராட்சி முழுவதுமாக 30 கிணறுகள் உள்ளன. அவற்றுள் 9 கிணறுகள் நகரத்திலும் மற்ற 21 கிணறுகள் கிராமப்புறத்திலும் உள்ளன.

இரண்டு துளைக் கிணறுகளும், 9 கிணறுகளும், இரண்டு குளங்களும் பேரூராட்சிக்கு நீர் வழங்குவதற்கு ஆதாரமாக உள்ளன. குடிநீர் வசதியை மேம்பாடு செய்வதற்காகக் கீழ்க்கண்ட நிவாரண வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன :—

குடிநீர்ப் பற்றுக்குறையை நீக்க 28—3—1974 முதல் லாரிகள் மூலம் 15 தடவையாக தினம் 15,000 காலன் குடிநீர் இப்பகுதிக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஐந்து கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டும், இரண்டு துளைக் கிணறுகளை மேம்படுத்தியும் நிலையான குடிநீர் வசதிக்கு வகை செய்யப் பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியம் இரண்டு புதிய துளைக் கிணறுகளை யூனிசெப் உதவியுடன் தோண்டி வருகிறது. எனினும், இன்னும் மூன்று புதிய துளைக் கிணறுகளைத் தோண்டுவதற்கான முயற்சிகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் விரைவில் மேற்கொள்ளும். பேரூராட்சியின் நிதியிலிருந்து கிராமப்புறத்திலுள்ள 21 கிணறுகளும் ஆழப்படுத்தப்படுகின்றன. தேவையான அளவு நீர் கிடைக்கின்றது. சில கிணறுகளில் நீர் 10 அடிக்கும் அதிகமான அளவு உள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட கிராமப்புற தொகுதிகளில், கஸ்தூரிபட்டி, நட்டம்பாளையம், பாக்கலையூர் பகுதிகளில் குடிநீர்ப் பற்றுக்குறை கடுமையாக உள்ளது. மேற்குறிப்பிட்ட கிராமங்களில் உள்ள கிணறுகளை ஆழப்படுத்தும் வேலை, பாறைகளை உடைக்கும் அமைப்பின் உதவினால்

நடைபெற்று வருகின்றது. குடிநீர் வாரியம் மூலமாக மேலும் சில துளைக் கிணறுகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தக்க காலத்தில் எடுக்கப்பட்ட முயற்சிகளினால் இவ்வூராட்சிக்கு குடிநீர் வசதி மேம்படுத்தப் பட்டுள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, சங்கரி நகரத்தில் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க ஒரு நிரந்தர பரிகாரம் காணும் பொருட்டு, காவிரி ஆற்றிலிருந்து நீர் கொண்டுவரும் திட்டம் ஒன்று இருந்ததே, அந்தத் திட்டம் இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்பதையறியலாமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** சங்கரி நகரப் பகுதிக்கு 18 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள காவேரி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்கப்படுவதற்கான திட்டத்திற்கு மூலச் செலவு 36.25 லட்சம் ஆகும் என்றும், ஆண்டு பராமரிப்புச் செலவு 1,75,000 ரூபாய் என்றும் கணக்கிடப்பட்டது. இந்த காவேரி குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற சங்கரி பேரூராட்சியின் நிதி வசதி இயலாததால் குறைந்த செலவில் சங்கரி நகர குடிநீர்த் திட்டத்தை உருவாக்க மறுபரிசிலனை செய்யப்பட்டு வருகிறது. கடனாக வழங்கப்படும் சுமார் 36 லட்சம் ரூபாய்க்கு வட்டியும் முதலுமாகத் திருப்பிக் கட்ட வல்லமை இல்லாததால் மாற்றுத் திட்டமாக நிலத்தடி நீரை அடிப்படையாகக் கொண்ட திட்டம் ஒன்று நடைபெற்று வருகின்றது. அது முடிந்தவுடன் வாய்ப்பு இருக்குமானால் நிரந்தர பரிகாரம் காணமுடியும்.

## (ஆ) செங்கல்பட்டு மாவட்டத்தில் பருவ மழை பொய்த்துவிட்டதும், நிலவரி, கடன் வசூல் இவைகளைத் தள்ளிவைக்க வேண்டியதன் அவசியமும் குறித்து

**திரு. கா. வேழவேந்தன்:** தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் கடந்த பல மாதங்களாகப் பருவ மழை பொய்த்துவிட்ட காரணத்தாலும், வறட்சி நிலை நீடித்து வருவதாலும் இம்மாவட்டத்தினை பஞ்சம் பாதித்த பகுதியாக அறிவிக்க வேண்டுமென்றும், உழவர்களிடமிருந்து வசூலிக்கும் நிலவரி, அரசுக் கடன் தொகைகள் ஆகியவற்றைத் தள்ளிவைக்க வேண்டுமென்றும், குடிநீர்க் கிணறுகள், ஏரி குளங்கள் ஆகியவற்றை ஆழப்படுத்த தனி நிதி ஒதுக்க வேண்டுமென்பதும் பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே, 1383-ம் பசலி ஆண்டில் வடகிழக்குப் பருவ மழை பொய்த்ததால் செங்கற்பட்டு மாவட்டத்தில்